# சற்குரு
# கோவிந்த சுவாமிகள்




சிவ செல்வராஜ்
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
வசந்தம் இல்லம், வடக்கு குண்டல்
கன்னியாகுமரி - 629702.

# காணிக்கை

திரு அருட்பா தந்த

திருவருட் பிரகாச வள்ளலார்

இராமலிங்க சுவாமிகள்

பொற்பாதங்களில்

பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்




| | | |
|---|---|---|
| தோற்றம் | : | 05-10-1823 |
| சன்மார்க்க சங்கம் | : | 1865 |
| சத்திய தருமச்சாலை | : | 1867 |
| சித்தி வளாகம் | : | 1870 |
| சத்திய ஞான சபை | : | 1872 |
| ஒளியாகி எங்கும் நிறைந்தது | : | 30-01-1874 |

# சற்குரு
# கோவிந்த சுவாமிகள்



## சிவ செல்வராஜ்

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
வசந்தம் இல்லம் - வடக்கு குண்டல்,
கன்னியாகுமரி - 629 702.
Cell : 9245153454

## பதிப்பு விபரம்


| | | |
|---|---|---|
| நூல் | : | சற்குரு கோவிந்த சுவாமிகள் |
| ஆசிரியர் | : | சிவ செல்வராஜ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| உரிமை | : | S.S. சுயம்ஜோதி |
| வெளியிடுவோர் | : | சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>வசந்தம் இல்லம் - வடக்கு குண்டல்<br>கன்னியாகுமரி - 629 702<br>Cell : 9245153454 |
| முதல் பதிப்பு | : | 30-12-2005<br>ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி<br>1000 பிரதிகள் |
| காணிக்கை | : | ரூ. 10 |
| கிடைக்குமிடம் | : | ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில் - 629 001<br>Ph : 04652 - 221307<br><br>R. சிவலிங்கம்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>பிளாக் எண் 14, K.M.A. கார்டன், சின்னாண்டிமடம்,<br>கொடுங்கையூர், சென்னை - 600118<br>Cell - 94443 62227<br><br>N. கோபால் சாமிராவ்<br>சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்<br>C-3, பஞ்சாப்ரோடு, பிளாக் - 4,<br>நெய்வேலி - 607801. Cell : 94438 76394 |
| அச்சிட்டோர் | : | நாஞ்சில் ஆப்செட் பிரிண்டர்ஸ்,<br>கோர்ட் ரோடு, நாகர்கோவில். Ph : 233853 |


### ஆசிரியரின் பிற ஞான நூல்கள்

| | |
|---|---|
| கண்மணி மாலை | ரூ. 50 |
| அருள்மணி மாலை | ரூ. 50 |
| ஸ்ரீபகவதி அந்தாதி | ரூ. 10 |
| அருட்பெருஞ்ஜோதி அந்தாதி | ரூ. 10 |
| சன்மார்க்க தெய்வம் | ரூ. 10 |

**வாங்கி! படித்து! உணர்ந்து? வாழ்வாங்கு வாழ்க!**

அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை

அருட்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி

# சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

வசந்தம் இல்லம், வடக்கு குண்டல்,
கன்னியாகுமரி - 629 702

## பணிவுரை

ஆன்மநேய ஒருமைப்பாடுடையீர்,

வந்தனம். நன்றி. நலமே நிலவுக. எல்லாம் வல்லவரான, எங்கும் நிறைந்த இறைவன் திருவருளால், சற்குரு திருவருட்பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்கள் ஆசியால், அடியேனை ஆன்மீக பாதையில் நடைபயில வைத்த கருணையின் திருஉருவம் ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் தூண்டுதலால், அடியேன் 21-03-1992 இல் முதன்முதலாக கண்மணி மாலை என்னும் ஞானவிளக்கம் கூறும் நூலை ஞானிகள் ஆசியுடன் வெளியிட்டேன்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என் உள்ளிருந்து தூண்ட பற்பல கவிநூற்கள் ஆக்கினேன். இறைவனை சுட்டும் இனியபாக்களே என் கை எழுதியது! ஆன்மீக வழி காட்டும் அறிவுப் பாடல்களே! என்து பிரார்த்தனையும் கூடவே இணைந்தது.

இரண்டாவதாக 21-12-1995 அனுமன் ஜெயந்தியன்று தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்ஸர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய விநாயகர் அனுமன் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக மதுரை அன்பர் திரு. A. மகாலிங்கம் அவர்கள் வெளியிட்டார்கள்.

மூன்றாவதாக 23-01-1996 தோட்டியோடு ஸ்ரீ மௌன குரு சுவாமிகள் குருபூஜையன்று, குருவருளால் அடியேன் எழுதிய ஸ்ரீ மௌனகுரு சுவாமிகள் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக இரணியல் அன்பர் திரு. K. திருநீலகண்டன் அவர்கள் வெளியிட்டார்கள்.

நான்காவதாக 28-07-1996 பிரதோஷத்தன்று மருந்துவாழ்மலை ஓம் உன் திருவருளடி ஆனந்த காளிதாசன் சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ சுந்தரேஸ்வரர் துதிகள் 108-ஐ இலவச புத்தகமாக ஆரல்வாய்மொழி ஜோதி குரு ஞானசபை அன்பர் சிவத்திரு இராமசாமி நாடார் அவர்கள் வெளியிட்டார்கள்.

ஐந்தாவதாக 16-09-1996 விநாயகர் சதுர்த்தியன்று ஸ்ரீ அறுகம்புல் சித்தர் நடராஜ சுவாமிகள் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ அறுகம்புல் சித்தி பாலவிநாயகர் துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக கோணம் ஸ்ரீ அறுகம்புல் சித்தர்தபோவன டிரஸ்ட்டார் வெளியிட்டார்கள்.

ஆறாவதாக 13-10-1996 நவராத்திரி முதல் நாளில் திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களின் 174-ஆவது திருஅவதார தின நன்னாளில் என் குரு ஜோதி இராமசாமி தேசிகர் அவர்கள் ஆசியால் அடியேன் எழுதிய ஸ்ரீ ஆயுர் தேவி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக வேம்பனூர் அன்பர் திரு. P.K. மாதவன் நாயர் அவர்கள் நினைவாக அவர்தம் மனைவி திருமதி. M. ஹைமாவதி தங்கச்சி அவர்கள் வெளியிட்டார்கள்.

ஏழாவதாக, 14-01-1997 பொங்கல் நாளில் அடியேன் எழுதிய தேரூர் குருமகாதேவ் இராமதாச பரமஹம்சர் போற்றி பாடல்கள், ஸ்ரீ அழகிய மணவாள விநாயகர் துதிகள் ஆக 108-ஐ இலவசப் புத்தகமாக பள்ளத்தூர் வாழும் உத்தம தம்பதிகள் திரு. S. தங்கமணி நாடார் திருமதி. S. தங்கப்பழம் நாடாச்சி ஆகியோர் வெளியிட்டார்கள்.

எட்டாவதாக 07-03-1997 மகா சிவராத்திரி திருநாளில் அடியேன் எழுதிய திருப்பன்னிபாகம் அருள்தரும் ஸ்ரீ ஆஞ்சநேய ஸ்வாமி துதிகள் 108-ஐ இலவசப் புத்தகமாக, எனது தந்தை ஜெயகுமாரி ஸ்டோர்ஸ் உரிமையாளர் திரு. K. சிவசுப்பிரணியபிள்ளை அவர்களின் 80 வயது நிறைவைக் கொண்டாடும் விதமாக எனது மகன் S.S. சுயம்ஜோதி Pre. K.G. அவர்கள் வெளியிட்டார்கள்.

ஒன்பதாவதாக பேயோடு, அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலய அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக திருநாளில் 15-06-1997-ல் பேரருள் புரியும் பேயோடு ஸ்ரீ குருதவசி ஐயா பாமாலை 108-ஐ இலவச புத்தகமாக ஸ்ரீ குருதவசி ஐயா குடும்பத்தாராகிய பேயோடு ஊர் பொதுமக்கள் வெளியிட்டார்கள்.

பத்தாவது நூலாக, அடியேன் முதலில் வெளியிட்ட கண்மணிமாலை பல புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டு 10-09-2002 விநாயகர் சதுர்த்தியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதினொன்றாவது நூலாக, சற்குரு வள்ளலார் தூண்டுதலால் அடியேன் அருள்மணி மாலை என்னும் ஞானவிளக்க நூலை எழுதி 18-02-2004 மஹா சிவராத்திரியன்று கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பன்னிரண்டாவது நூலாக அடியேனை காத்து இரட்சிக்கும் அகில உலக அன்னை, ஆதி சக்தி, கன்னிகா பரமேஸ்வரி, பாலா, வாலை, தாய், கன்னியாகுமரி அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மனை வேண்டி பிரார்த்தித்து ஸ்ரீ பகவதி அந்தாதியை இயற்றி நாகர்கோவில் கெங்கா ஜுவெல்லர்ஸ் பேருதவியால் 23-06-2004 ஆனி-மகம் மாணிக்கவாசகர் குருபூஜையன்று அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி, மகாமாயை கன்னியாகுமரி

அருள்மிகு ஸ்ரீ பகவதி அம்மன் பொற்பாதங்களில் சமர்ப்பித்து வெளியிட்டோம்.

பதின்மூன்றாவது நூலாக, எல்லாம் வல்ல இறைவன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவர் திறத்தைக்கூறி, அருள்புரியும் விதத்தை வெளிப்படுத்தி, அடியேன் உள்ளிருந்து சற்குரு வெளிப்படுத்தி அருளிய, ஒப்பற்ற அருட்பெருஞ்ஜோதி அந்தாதி என்னும் நூலை 25-01-2005 தைப்பூசத்தன்று திருவண்ணாமலை ஆகாஷ் ஹோட்டல்ஸ் உயர்திரு. S.R. முத்து கிருஷ்ணன் பேருதவியால் வடலூரில் தர்ம சாலை-யில் வெளியிடப்பட்டது.

பதினான்காவதாக சன்மார்க்க தெய்வம் எனும் நூலை நாகர்கோவில் ஜெயகுமாரி புத்தக நிலைய உரிமையாளர் S. அசோக்குமார், பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா 80-வது பிறந்த நாளான 23-11-2005-ல் வெளியிடுகிற புண்ணியம் பெற்றார்.

பதினைந்தாவது நூலாக இந்த "சற்குரு கோவிந்த சுவாமிகள்" 30-12-2005 ஸ்ரீ ஆஞ்சநேயர் ஜெயந்தி திருநாளில் ஆரல்வாய்மொழி இராமலிங்க சுவாமி நிலைய அன்பர் ஜோதி ஸ்ரீ N. கனக சபாபதி அவர்களால் வெளியிடப்படுகிறது.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் சென்னையில் ஏற்படுத்தி சுமார் 400 அன்பர்கள் தீட்சை பெற உதவிய ஜோதி. ஸ்ரீ. R. சிவலிங்கம் அவர்கள் பணி சிறக்க எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். நன்றி கூறுகிறேன்.

என்றும் அடியேனை ஆதரிக்கும் சென்னை T. முருகேசன், G. நாராயணா, G. கோபாலகிருஷ்ணன், K. பாலயோகி, ஆரல்வாய்மொழி N. கனக சபாபதி, நாகர்கோவில் சி. சுப்பிரமணியம், S. கிருஷ்ணபிள்ளை, S. நீலகண்டன், C. பரமேஸ்வரன், கன்னியாகுமரி கோபாலன் நெய்வேலி அம்மா ஆகிய ஆன்மநேய அன்பர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நாகர்கோவில் M. கோபால ஆசான் மகன் ராஜா அவர்களுக்கும் அவரோடு ஒப்பற்ற மருத்துவ பணிபுரியும் ஆசான் சேகர் அவர்களுக்கும் அடியேனுடைய ஆன்மீகப் பணியில் பங்கு உண்டு. அவர்கள் உதவிக்கு நன்றிகூற வார்த்தை ஏது ?!

எல்லோரும் எல்லா நலனும் பெற்று நலமுடன், வளமுடன், சிறப்புடன் வாழ்வாங்கு வாழ வேண்டி இறைவனை வணங்குகின்றேன்.

என்னுயிர் காத்த மகானுபாவாக்கள் இட்ட பணியை செவ்வனே செய்கிறேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

என்றும் உண்மையுள்ள,
**சிவ. செல்வராஜ்,**
கன்னியாகுமரி.

## சற்குரு கோவிந்த சுவாமிகள்

மரணமிலா பெருவாழ்வு பெற்ற ஞானிகள், சித்தர்கள் நம் நாட்டில் ஏராளம்!

ஒப்பற்ற இறைவனை உணர்ந்து ஒளி உடல் பெற்ற மகான்கள் ஏராளம்!

இந்தியாவின் பெருமையே இதுதான்!

இந்த ஆன்மீக பூமியில் பிறந்த நாம் மிகவும் புண்ணியசாலிகள்! இறையருள் பெற்றவர்கள்!

அடியேன் பூவுடல் எடுத்த 24 ஆண்டில் திருவடியை சரணடையும் பேறுபெற்றேன்.

எந்தன் வாழ்விலும் அருள்கூட்டிய ஞானிகள் பலர்! வழிகாட்டியோர் பலர்!

"உலகே மாயம் வாழ்வே மாயம்" என எனக்கு உணர்த்தி என்னை நெறிப்படுத்திய மாகுரு சித்தர் பெருமகனார்தான் கோவிந்த சுவாமிகள்!

கன்னியாகுமரிக்கு என்னை அழைத்தது வாலை கன்னியாகுமரி அம்பாள் அருள் பெறச் செய்தது, கன்னியாகுமரியிலே இருக்கச் செய்தது, குருபீடத்தில் அமர்த்தியது எலலாம் வல்லவரான சற்குரு கோவிந்த சுவாமிகளே! அவரின் ஒப்பற்ற அருளாசியே!

பல ஞானிகள் இன்றும் கூடவே இருந்து எம்மை வழிநடத்துகிறார்கள்!

கோவிந்த சுவாமிகள் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலிலே காட்சி தந்து கருணை புரிந்து வழிகாட்டியதால்தான் அடியேன் இன்று குருஸ்தானத்தில் இருந்து வழிகாட்ட முடிகிறது. வள்ளல் பெருமான் கூடவே இருந்து நடத்துகிறார்!

சூட்சும நிலையில் இருந்து ஆன்மீக ஞானத்தை உலக மக்களுக்கு உணர்த்தி வருவது ஒன்றே அவர்தம் ஒப்பற்றப் பணி!

இன்னார் என்று அறிவிக்காமலேயே எனக்கு வழிகாட்டிய தெய்வம் சற்குரு. தேடுகிறேன்! காட்சி தருவாயா? சற்குருவே! எங்கும் இருப்பார்! யாருக்கும் அருள்வார்! அவர்தம் புகழ் பாடுவதே எமக்கு மகிழ்ச்சி.

✤ ✤ ✤ ✤ ✤

# சற்குரு கோவிந்த சுவாமிகள்

## காப்பு

பரசுராம பிள்ளையார் பகவதி அருகினிலே
அரசுபுரி எம்மையே அடியேன் நிலைபெறவே
முரசுகொட் டுலகிலே முதிர்ஞானி கோவிந்தனே
சரசுவதி வினாயகா சதகம் பாடஅருளே

## குமரி அன்னை துதி

குமரியாம் அன்னையாம் குமரிமுனை இருப்பவளே
உபரியாக ஞானமே உலகிலே விளங்கிடவே
அபரிமித மாகஅருள் அடியேன் பணிபுரியவே
கௌரி கௌ மாரிபகவதி கண்மணியே அருளே

## சித்தர்கள் துதி

சித்தம் தெளிந்த சன்மார்க்க பெரியோர்களே
நித்தம் போற்றும் நின்மக்கள் வாழ்ந்திடவே
புத்தம் புதுசதகம் பாடிடஅருள் சித்தர்களே
தத்தம் நிலையுணர தக்கபடியே அருள்கவே

## அந்தாதி சதகம்

அன்பான நிலையாகி அமைதியே உருவாகி
இன்பான மேனிலை இவ்வுலகில் தானடைய
துன்பான இருவினை தூரத்தள்ளி கோவிந்தா
உன்பாத கமலந்தா ஊர்த்துவம் தான்கூடவே

கூடவே முச்சுடர் கூடவே இருப்பாயே
நாடவே நன்மார்க்கம் நவில்வாய் எமக்கே
ஓடவே துன்மார்க்கம் ஓங்கார மயமானவனே
பாடவே மட்டுமன்றி பக்குவமும் தானருளே

அருளே உன்செயல் அறிவேன் யானுமே
பொருளே வேண்டினேன் பொன்னான உடலோனே
இருளே அண்டாது இனியென்றும் ஒளியாகவே
மருளே வராதெனை மனிதனாய் மாற்றுவாயே

மாற்றுவாய் உலகினை மக்கள் நலம்பெறவே
போற்றுவார் எல்லாம் புகழுடல் பெற்றிடவே
சாற்றுவாய் நீதிதனை சன்மார்க்கம் நிலைக்கவே
ஏற்றுவார் என்றும் ஏகாந்தம் இருப்பரே

இருப்பரே மெய்யுளே இருளகற்றி இன்புற்றே
கருப்பெற கண்ணிணை கண்டுணர் உபதேசிக்க
இருப்பாரே கோவிந்தசாமி இணையடி பணிவாயே
கருப்பாறை பகவதி கண்ணின் ஒளியே

ஒளியே மிகுந்த ஒப்பிலா கோவிந்தா
நளியே போதும் நாடிடும் எனைக்கா
துளியே ஆயினும் துன்பம் தாளாதே
அளியே உடனே அருளை எமக்கே

எமக்கே துன்பெலாமோ ஏற்றருள கூடாதா
உமக்கே இது தகுமோ உன்னடி சரணமே
ஏமக்கே என்றெனை ஏளனம் புரியாதே
ஆமுமக்கே அடிமை ஆற்றுவாய் கோவிந்தா

கோவிந்தா என்றுனை கோடிதரம் அழைத்தேனே
பாவியிந்த மகனின் பரிதவிப்பை போக்குவாயே
ஆவியிந்த உடல்மாறி அலைந்திட வைத்திடாதே
நாவிந்த சன்மார்க்கம் நிலைபெற பாடணுமே

பாடணுமே கோவிந்தன் புகழ்தனை உலகறியவே
ஆடணுமே எனைமறந்து ஆண்டவனை உணர்ந்தே
கூடணுமே பரத்தோடு கூவியழைக் கின்றேனே
ஊடணுமே உன்மத்தம் உன்னால் தான்பெறவே

பெறவே சத்சங்கம் பெம்மான் உன்னோடே
அறவே நீக்குவாய் அடியனின் இன்னலையே
உறவே சாதுக்கள் உடனேயே வேண்டுவனே
மறவே னுன்நாமம் மாமனிதா சித்தனே

சித்தனே பாவியேனை சிவமாக்கி அருள்கவே
அத்தனே யானுன் அடிமை யன்றோ
முத்தனே உன்னாலே முன்னாலே ஆளானேனே
பித்தனே நானிதுவரை பிதற்றியது அறியாமலே

அறியாமலே இருந்தவனை ஆட்கொண்ட அண்ணலே
தெரியாமலே கண்காணித்த தெய்வமே கோவிந்தா
புரியாமலே போயிடாது புண்ணியம் உணரவே
குறியாமலே வந்துடனே குடும்பம் காப்பாயே

காப்பாயே கண்ணின் கருமணியே கண்ணாளா
பார்ப்பாயே இருவினை பாவியேனை விட்டோடவே
சேர்ப்பாயே திருவடி சேயெனை ஆட்க்கொண்டே
பூப்பாயே புண்ணியனே பூரணனே ஆனந்தமே

ஆனந்தம் வேண்டுமே ஆனந்த ஆதீதனே
நானந்த நிலைபெறவே நற்கருணை புரியுமே
ஊனந்த உணர்வுறு உள்ளொளி காணவே
தானந்த மானவனே தகுதியை தருவாயே

தருவாயே தகுதியை தவராஜ சிங்கமே
வருவாயே எதிரிலே வல்லமை மிக்கோனே
உருவாயே ஒளிரவே உன்கருணை வேண்டுமே
இருவாயே இணையடி இருப்பாயே இயல்பாய்

இயல்பாய் இருக்கவே இகபரநலம் பெறவே
முயல்வாய் என்றெனை முடுக்கிய முக்தனே
பயில்வாய் கலையென பகர்வாய் எனக்கே
துயில்வாய் தூங்காமலே துக்கம் நீக்குவாயே

நீக்குவாய் ஆணவம் நிர்மலனே கோவிந்தா
போக்குவாய் பிறவியை புண்ணிய மூர்த்தியே
ஆக்குவாய் அன்பனாய் ஆறாதாரம் கடந்தே
மூக்குவாய் கண்செவி முதிர்ந்திட ஈதிடு

ஈதிடு தருணமிதே இணையிலா சித்தனே
ஊதிடு எம்வினையை உணர்வுறு நிலையருளே
வாதிடு வேனோயுனை வணங்கி வாழ்வேனே
மாதிடு அருளுக்கு மனமுருகி பணிந்தேனே

பணிந்தேனே உந்தன் பாதகமலந் தனையே
துணிந்தேனே பவக்கடல் துயரதனை நீக்கவே
தணிந்தேனே துன்பதால் தடுத்தாட் கொண்டதால்
அணிந்தேனே பாமாலை ஆசானே உந்தனுக்கே

உந்தன் மகிமை உரைக்க மகிழ்ந்தேனே
எந்தன் மனதை ஏற்பாய் கோவிந்தனே
வந்தென் மயக்கம் வறுமை மாற்றுவாயே
நுந்தன் தொடர்பு நாளும் இருக்கவே

இருக்கவே இருக்கிறது இனிதான சன்மார்க்கமே
பெருக்கவே அருள்சு பேரின்பம் கூடிடவே
அறுக்கவே ஆசையை அன்பரோடு சேர்த்துவை
சிறக்கவே போற்றவே சித்தனென ஊரெலாமே

ஊரெலாம் போற்றும் உத்தம சற்குருவே
பேரெலாம் கோவிந்தா போலாமோ உலகிலே
யாரெலாம் இருந்தாலும் யானுனை நாடுவேனே
கூறலாம் இணையிலை உந்தனுக்கு உண்மையே

உண்மையே கடவுள் உணர்ந்தால் பேரின்பமே
பெண்மையே நாமெலாம் பெம்மானை கூடுவோமே
அண்மையே இருக்கிறார் அவனடி பணிவோமே
திண்மையே ஊட்டி தீரனாக்கு எங்களை

எங்களை காத்திடும் எங்குல தெய்வமே
திங்களை சூடிய திருவும் நீதானோ
மங்கள வாழ்வருளி மாட்சிமை காணவை
உங்கள டிமையெனை உய்விப்பா யுடனே

உடநே வருகவே ஊர்த்துவம் அருள்கவே
கடநே என்றிடாதே கடவுளாய் காப்பாயே
சுடறே ர்ந்திடாது சாயுச்சியம் பெறவே
மடறே சமகற்றி மகிழயருள் ஐயமே

ஐயம் தீர்ப்பாயே ஐயா சரணமே
ஐயை அருள்பெற ஐக்கியம் ஆகவே
ஐயெ ட்டுநாள் ஐம்புலம் ஒடுக்கியே
ஐயம் கேட்டேனே ஐயனுன் அடைக்கலமே

அடைக்கலம் ஆனவரை ஆதரிக்க வேண்டாமோ
படைக்கலம் எதற்கு பகவானே நீயிருக்கவே
உடைக்கலாம் உடலை உணர்வால் ஒளியால்
படைக்கலாம் சாதனை பரமகுரு ஊனிலே

ஊனிந்த மண்ணில் உதிராது நிலைக்கவே
வானிந்த மழலைவாழ வரந்தந்து காப்பாயே
ஏனிந்த தாமதம் ஏழையெனை ரட்சிக்கவே
நானிந்த பூமியில் நாறியது போதாதா

போதாதா சோதனை பேதையெனை உயரவிடு
வாதாதா வரந்தனை வல்லமை சித்தனே
மேதாதா கோவிந்தா மேன்மை யடையவே
மாதாதா னெனக்குனீ மன்னவா இன்பதே

இன்பது கிட்டிட இடவலம் மாற்றியே
ஒன்பது சுற்றினேன் ஒளிதனை காணவே
துன்பது நீங்கிட துலக்கம் தந்தவனே
அன்பது அருளது அப்பனே உன்வடிவே

வடிவே லவனோ வந்தது திருமாலோ
அடிவே தனையால் அலறிடாது அருளே
இடிவே றுவிழுமோ இன்றுள நிலையிலே
கடிவா ளமுன்னிடம் கோவிந்தா ஓங்காரா

ஓங்கார மயமே ஓதிடு உபதேசமே
ஆங்கார மடக்கி ஆண்டிடு என்னையே
ரீங்கார மென்னுள் ராப்பகல் கேட்டிடவே
பாங்காக அருள்வாய் பரமாத்ம சொரூபனே

சொரூபமே பொன்னாக்க சொன்னார் இராமலிங்கமே
அரூபமே யானவனை அடியேன் அறியவே
நிரூபமே புரிந்திட நீயருள் கோவிந்தா
உரூபமே ஒளியாக உதவிடு உத்தமனே

உத்தமனே ஞானியாம் உணர்வுட னிருப்பானாம்
நித்தமுனை தரிசிக்க நீதானே அருளணுமே
புத்தமுதே புதுநறவே புசித்திட வைப்பாயே
சித்தமுன் பாக்கியமே சிவமாய் வாழவே

வாழவே மண்ணிலே வானிலே வாழ்வாங்கே
சூழவே அன்பர் சூக்குமம் உரைத்தே
ஆளவே வேண்டுமே ஆண்டியாய் இருந்தே
மீளவே நாங்கள் மீட்பனே சரணமே

சரணமே ஆனபின் சங்கடம் வரலாமோ
இரணமே எந்தன் இதயமே இரட்சிப்பாயே
கரணமே நீயானாய் காட்டுதிரு முகத்தை
மரணமே இல்லாது மகிழவே வைப்பாயே

வைப்பாயே வாழ்வாங்கு வையத்துள் வாழவே
துய்ப்பாயே என்றென் துன்பம் நீக்குவாயே
கைப்பாயே யானால் கதறுவேன் இனிப்பாயே
நைப்பாயே நாங்கள் நலமடைய பூரணனே

பூரணனே புண்ணியனே புரவியேறி வருகவே
காரணனே நானுய்ய கட்செவி திறப்பாயே
நாரணனே கோவிந்தா நான்மறை வித்தகா
கூறணுமே நல்வாக்கு குறைநீக்கு குருவே

குருவே கோவிந்தா குணம் தா ஆனந்தா
வருவே னுன் பாதம் வரம் தா நிரந்தரா
அருவே என்னாருயிரே அபயம் அபயமே
உருவே காட்டாது உலவுவது சரியா

சரியா தவறா என சிந்தித்து உணரவை
சரியா மார்க்கம் சன்மார்க்கம் நிற்கவை
சிரியா மலே நின்றிட சத்சங்கம் கூட்டிவை
சரியா னதருணம் சற்குருவே ஊட்டிவை

ஊட்டிவை அமுதை ஊர்த்துவம் அருளே
மாட்டிவை மனதிலே மார்ச்சாலம் ஆனேனே
பூட்டிவை த்ததை பூரணமாக திறந்திடே
ஆட்டிவை த்திடாதே ஆனந்த ஆதீதனே

ஆதீதனே அப்பனே அம்மையே அருட்குருவே
கதிதான் நீயெனக்கே கருணையால் ஆள்கவே
பதிதான் உணரவே பாவியேன் மீளவே
அதிதியே போற்றி அன்புடன் நிலைக்கவே

நிலைக்கவே ஊனுடலும் நித்தியம் கூடியே
கலைக்கவே முடியாமல் கருணையோடு வாழவே
அலைக்கவே செய்தால் அரண்டு போவேனே
மலைக்கவே வேணுமே மாநிலமே எனை பார்த்தே

பார்த்தே இருக்காதே பரிந்தருள் கோவிந்தா
சேர்த்தே வைப்பாயே சேவடியில் எம்மையே
ஈர்த்தே விட்டாயே ஈண்டினி எங்குறுவேன்
சீர்த்தே வையெலாம் சீக்கிரம் அருள்வாயே

அருள்வாயே அற்புத ஆனந்த நிலையே
அருள்வாயே அடியவர் ஆயிரம் ஆயிரமே
அருள்வாயே அகத்திலே அன்பு ததும்பவே
அருள்வாயே கோவிந்தா அட்டமா சித்தியே

சித்தியே மட்டுமன்றி சிவமும் வேண்டுவனே
புத்தியே தெளிந்திட புருவத்திடை நின்றிடவே
உத்தியே அறிவித்து உன்னத நிலைபெறவே
சத்தியே வருவாயே சர்வமும் உணரவே

உணரவே அருள்புரிக உத்தமனே கோவிந்தா
உணரவே உடற்கூறு உலகநிலை கலைகளை
உணரவே அன்பை உன்னை என்னை
உணரவே பார்க்கவே உலகன்னையை வழிகாட்டே

காட்டே எந்தனுக்கு கண்மணியே ஒளியே
வீட்டை விட்டோடாது வீடுபேறு பெற்றிடவே
ஓட்டே துன்பத்தை ஓங்கார ரூபனே
பாட்டே பட்டபாடே பாவியினை மீட்பாயே

மீட்பாயே மழலையான் மாதா நீயே கோவிந்தா
பீப்பாயே என்வயிறு பிணமாகி போகாதருள்
காப்பாயே எந்நாளும் கருணை மிக்கோனே
கேட்பாயே குமுறலை கேட்டினை அகற்றிடே

அகற்றே எந்தன் ஆணவத்தை துன்பத்தை
அகத்தே ஒளிரும் அத்தனை கூடவே வை
இகத்தே செல்வமும் இன்பமும் பெற்றே
பரத்தே உணர்ந்தே பண்போடு வாழ்வேனே

வாழ்வேனே வள்ளலார் வழிகாட்டிய படியே
தாழ்வேனோ துன்பதால் தடுத்தாள இருக்கிறாயே
மீள்வேனே பவக்கடல் மிகுகருணை தெய்வமே
ஆள்வாயே கோவிந்தா ஆண்டுகள் போகிறதே

போகிறதே மானம் புண்ணியம் இலையா
வேகிறதே நெஞ்சம் வேறு வினையை
சாகிறதே சரி என்றால் செத்துவிட தயார் நானே
நோகிறதே உடல்மனம் நோன்புதான் புரிந்திலனே

புரிந்திலேன் புண்ணியம் புழுவினும் கடையேன்
அறிந்திலேன் நல்லோரை அகத்தில் அழுக்கே
எறிந்திலேன் மும்மலம் எப்படியான் மீள்வேன்
தெரிந்திலேன் கோவிந்தா தென்குமரி இருப்பவனே

இருப்பவனே என்றும் இன்பமாய் உலவுகிறோனே
பொருப்பவனே கோவிந்தனே பொறுப்பாய் என் பிழை
நெருப்பவனே சுடாதவனே நெஞ்சில் நிறைந்தாயே
மறுப்பவனே நீசர்களை மன்னிப்பாய் என்னையே

என்னையே மாற்றிடாதே எங்களை காப்பாற்றையா
உன்னையே நம்பினேன் உற்றதுணை யாவாயே
அன்னையே கோவிந்தா அறுகம்புல் சித்தருக்கு
முன்னையே குருவானவா முதிர்ந்த ஞானியே

ஞானியே அருளிட ஞாயிறென வருகவே
ஆனியே வருமோ ஆபத்பாந்தவ னீயிருக்க
சூனிய யங்களேதும் சூழாமல் காப்பாயே
கூனியே வாழ்கிறேன் கோவிந்தா குறைதீர்

குறைதீர் கோமானே கோபம் களைவாயே
நிறைவான வாழ்வை நிர்மலனே தருவாயே
பறைவேன் உன்புகழை பக்த வத்சலனே
இறைவன் அடியவனே இனிநானுன் அடியவனே

அடியவனே நடராசன் அடியவனே வீரபாகுவே
அடியனும் சத்சங்கத்தில் அணைந்திட அருள்கவே
கொடியவனே யானெனினும் குருமாரே மன்னிப்பீரே
மடிபவன ல்லயான் மாநிதியம் கிட்டவை

கிட்டவை பரிபூரணம் கோவிந்தா நடராசாயுன்
கிட்டவை ஜோதிநாதா கிருபை புரிகவே
எட்டவை தீயோரை எட்டிரண் டுரைக்கவை
நட்டவை மலர்ந்திட நாடினேனுன் பாதமே

பாதமே போற்றி பணிந்தேன் பாலாவே
கீதமே பாடினேன் கோவிந்தா அறிவாயே
பூதமே கரைந்திட புண்ணியம் தருகவே
வாதமே கூடாது வல்லமை வேண்டுமே

வேண்டுமே பதினாறும் வேதனைதான் தீர்க்கவே
நீண்டுமே லறுபத்தி நான்கும் ஓங்கவே
கூண்டுமே லேறியே குவலயம் காணவே
யாண்டும் கோவிந்தா யாசிக்கும் ஏழையே

ஏழையே தான் நான் ஏறெடுத்து பாரையா
கூழையே குடிக்கவும் கோவிந்தா வழியில்லையே
வாழைய டிவாழையாய் வந்துதித்த வள்ளலே
ஊழையா ன்வென்றிட ஊர்த்துவம் ஏற்றிடே

ஏற்றிடே ஏறாநிலையில் ஏகம்பத் தூடே
மாற்றிடே மனிதனாய் மாநிலம் போற்றவே
காத்திடே எந்தனை கருணை உள்ளவா
தூற்றிடா வாழ்வை தருவாய் தூயவனே

தூயவனே துடிக்கும் துவளும் எனைக்கா
மாயவனே மறந்தும் மறக்கருணை புரியாதே
சேயவனே என்றெனை சேர்த்தணை துயர்தீர்
காயவனே என்றிடாதே கனிவிப்பாய் கருணையாலே

கருணையாலே ஆட்கொண்ட கண்ணிய மிக்கவா
தருணமிது அல்லவோ தாமதிப்ப தழகோ
அருணனை மதிவழியே அகத்திலே புகவே
இருணீக்கி எந்தன் இதயத்தில் துலங்கவே

துலங்கவே துக்கம் தூரவே ஓடுமே
கலங்கவே விடாதே கோவிந்தா கருணைசெய்
மலங்கவே விழிக்கிறேன் மயக்கம் போக்கிடே
குலங்காக் கவேவா குணாதீதா மாமனிதா

மாமனிதா எங்கள் மாதேவா மன்னவா
காயினிதா எந்தனை கனிவிக்கச் செய்வாயே
சேயினிதா அருளோடு செல்வம் எல்லாமே
காமனிதோ வருகிறானே கடாசிட மாட்டாயா

மாட்டாமலே இனியான் மீண்டிட அருள்வாயே
மீட்டாமலே நாதம் மேனியுள் கேட்கவே
காட்டாமலே போகாதே கோவிந்தா திருமுகத்தை
ஓட்டாமலே இருந்தால் ஓங்கிடுமே துன்பமே

துன்பமே இல்லாத தூயவாழ்வு வேண்டுமே
இன்பமே இனிநாளுமே இணையிலாகுரு பெற்றேனே
அன்பனே என்றெனை அரவணைத் தருள்கவே
என்பனே கோவிந்தன் எந்தன் சுவாமியே

சுவாமியே சுடரே சுத்தபரி பூரணமே
வாமியே காத்திட வந்தாளே வாலையே
காமியே பூமுகத்தை கருணை காட்டுகவே
சேமியேன் இருவினை சேர்ந்தேன் சத் சங்கமே

சங்கமே சார்ந்ததால் சாவிலிருந்து தப்பினேனே
அங்கமே நோகுதே அவச்சொல் கேட்டே
பங்கமே ஆகாதே பாவிநான் மீளவே
தங்கமே சுயஞ்ஜோதியே தவறினை மன்னிப்பாயே

மன்னிப்பாய் என்றுதான் மனமகிழ்ந் திருக்கிறேன்
உன்னிப்பாய் கவனிக்க உறுதுணை ஆவாயே
என்னிப்படி சோதனை என்னிலை நீ அறியாததா
உன்னிப்படி யேறிடவே ஊர்த்துவம் ஏறிடவே

ஏறிடவே வெளியிலே ஏகாந்தம் பெற்றே
கூறிடவே பணிந்தேன் கோவிந்தா வழியினை
மாறிடவே வந்தேன் மறுபிறவி வேண்டாமே
தேறிடவே துணையாவாய் தேவாதி தேவனே

தேவனே இன்னமும் தேறலையா காப்பாயே
ஆவன செய்வாயே ஆபத்தினை நீக்குவாயே
போவன பாவமே போக்கிலை வேறெனக்கே
ஈவனே கொடுப்பாயே ஈதுனக்கு எளிதே

எளிதே ஓங்கிட எனக்கருள் தருவாயே
பழிதான் வாராதே பக்குவமாய் கூடிடவே
விழிதான் வழியே விக்கினங் களைவாயே
களிதான் போதுமே கோவிந்தா வருகவே

வருகவே எந்தன் வல்வினை நீக்கவே
தருகவே முக்தி தத்துவ வித்தகனே
பெருகவே ஞானம் பெம்மானே அருள்கவே
முருகவே ள்மூலமே முக்கியம் ஆகிடவே

ஆகிடவே முதிர்ஞானி ஆண்மகனே ஆற்றல்தா
போகிடவே பொல்லாப்பு போதம் தா நிலையாகவே
ஏகிடவோ வினைவிட்டு ஏந்தலே கூறுக நீ
நோகிடவே செய்குதே நோவினை ஓட்டிடு

ஓட்டிடு தீயவர்களை ஓடஓடவே ஒளியானவா
மீட்டிடு என்னையே மாளாமல் காத்திடு
காட்டிடு உன்னையே கண்ணாமூச்சி வேண்டாம்
ஊட்டிடு நான்வாழ உன்கையால் அமுதமே

அமுதமே திகட்டாத ஆனந்தமே அனுபூதியே
குமுதமே குணாதீதா குடும்பம் தழைக்கச் செய்
சுமுகமா கவேசுற்றி சாஸ்வதம் நிற்கணுமே
சமுகமே வாழ்ந்திட சாற்றிடு சன்மார்க்கமே

சன்மார்க்கம் நிலைக்கவே சத்சங்கம் துலங்கவே
நன்மார்க்கம் இதை நாநிலம் நன்கறியச் செய்யவே
என்மார்க்கம் இதுதான் என்கோ விந்தனே
உன்மார்க்கம் வேறில்லை ஊர்த்துவ கதியானே

கதியானே கற்பிப்பாய் கலையெலாம் கனிவாகவே
விதிதானே என்றிடாதே விட்டிடாதே விரட்டிப்பிடி
சதிதானே வாட்டுது சம்ஹாரம் செய்திடே
புதிதான வாழ்வினை பெற்றிடல் சத்தியமே

சத்தியமே உன்னருளால் சாவாநிலை பெறுவேனே
நித்தியமே உறைவேன் நிர்மலனே அருள்வாய்
பத்தியமே காத்திட பக்தனை அரவணையே
கட்டியமே கூறுவேன் கடவுளின் குழந்தையே

குழந்தையே நானுனக்கு குருதேவா குறைதீர்
உழன்றேனே உலகிலே உண்மை உணராமலே
அளந்தேனே அறியாதே அறிவித்திடு அதீதனே
உளந்தானே கோவில் உள்ளிலே கடவுளே

கடவுளே கண்ணின் கருமணியே கோவிந்தா
நடவுளே என்றுநீ நான்நடக்க அருளே
புடவுளே பொற்கதிர் பொதிந்து கிடக்குதே
திடமுளே தந்தருள் தீனதயாளா முனிவனே

முனிவனே தருவாய் முதிர்ச்சியே முப்பாழிலே
இனியிவனே தேறிட இணையடி சூட்டுவாயே
தனியனே எனக்கு தக்க துணை ஆனவனே
சனியனே என்றிடாதே சகலகலா வல்லவனே

வல்லவனே நானுந்தான் வல்லமையுடன் வாழவே
கல்லவனே என்றிடாது கருணைமழை பொழிக
வில்லவனே அம்புநான் விண்டு நீ உரைக்கவே
நல்லவனே கோவிந்தா நானுய்ய ஆசிதா

ஆசிதா ஆற்றிடு அவலம் மாற்றிடு
ஊசிதா னுழையுமோ உள்நாடி போகையிலே
பாசிதா னேமலம் பிய்த்து எறிந்திடு
தூசிதா னேயுனக்கு தூதுவளைக்கு போகணுமே

போகணுமே வரவு போக்கற்று புவியிலே
சாகணுமே மனம் சாத்தியம் அசாத்தியம்
ஆகணுமே வாழ்வு ஆறாதாரம் தாண்டணுமே
ஈகணமே அருள் ஈசாயோக நேசனே

நேசனே நினைவுதான் நீண்டே போகுதையோ
நீசனே யான்என் நிலையுணர செய்வாய்
தேசனே திரவியமே திகட்டா அமுதமே
வாசனே வாரியே வழங்கும் வள்ளலே

வள்ளலே என்னை வளமை யாக்கிடுவாய்
துள்ளலே இலாது துடிப்படக்கி ஆண்டிடுவாய்
தள்ளலே லென்னை தவறுகளை மன்னிப்பாயே
உள்ளிலே உள்ளதை உணர்ந்து உருகவே

உருகவே அன்பால் உலகை வெல்லவே
பருகவே அமுதம் பத்தாமிடஞ் சேர்ந்தே
கருகவே வினைகள் கந்தனை காணலாமே
பெருகவே என்றெனக்கு பெருநிதியம் அள்ளித்தா

அள்ளித்தா னிறைத்தேன் அடாதுபல புரிந்தேன்
துள்ளித்தான் திரிந்தேன் திமிராகவே பேசினேன்
எள்ளித்தான் நகைத்தனர் என்செயல் கண்டே
நுள்ளித்தான் எறியே நிர்மலனே நிர்குணனே

நிர்குணனே நின்நாமம் நான்பாட அருள்வாயே
எற்குண வளித்த எந்தையே ஏற்றருளே
சற்குண சாந்த சொரூபனே கோவிந்தா
நற்குண நற்செயல் நான்புரிய நாடினேனே

நாடினேனே உன்பாதமே நல்லருள் புரிகவே
பாடினேனே அந்தாதி பணிவுடன் சமர்ப்பணமே
கூடினேனே சத்சங்கம் கோவிந்தா வீரபாகுவாமே
தேடினேனே நற்கதி தேற்றியே வாழ்த்தே

வாழ்த்தே வேண்டும் வாழ்வாங்கு வாழவே
ஆழ்த்தே அன்பினில் அருள் கடலினுள்
ஊழ்த்தே கமொளியாக ஊர்த்துவம் தருகவே
ஆள்த்தே டியலையாதே அடிமைநான் இருக்கையிலே

இருக்கையிலே இருந்தாலே இறவாநிலை பெறலாமே
பருக்கையிலே சோற்றாலே பரிதவிப்பு கூடிடுமே
பெருக்கையிலே அக்கினியை பேதந்தான் அற்றிடுமே
குருகையிலே ஆனாக்கால் குறையிலை நித்தியமே

நித்தியமே வேண்டினேன் நிர்விகல்ப மானவனே
வட்டியுமே கொடுத்து வாழ்விழந்து போனேனே
கத்தியுமே கேட்கலையோ கோவிந்தா கருணைபுரி
புத்தியுமே பேதலிக்குமே பேரருள் தராவிடிலே

தராவிடிலே உயிர் தரியேன் ஒருகணமுமே
பராவிடலே லட்சியம் பாவியேனை ரட்சிப்பாய்
இரா விடிலோ கருணை இருப்பதில் பொருளில்லை
குலாவிடிலே வேண்டும் குவலயம் சிறக்கவே

சிறக்கவே ஆசை சீர்தருக வள்ளலே
மறக்கவே வேண்டும் மாபாதக செயலை
இறக்கவே கூடாது இனியான் என்றுமே
பிறக்கவே கூடாது பித்தாகி போனேனே

போனேனே மூடனாய் போதம் தருகவே
ஆனேனே சீடனாய் ஆதரிப்பாய் ஆசானே
ஊனேநி லைக்கவே ஊறவே அமுதமே
தானேதே டியதேவா தன்னிகரிலா தந்தையே

தந்தையே தாயே தலைவா தற்பரனே
சிந்தையே துலங்க சிவானுபூதி கிட்டவே
விந்தையே புரியும் வீரனே கோவிந்தா
எந்தையே காத்தருள் ஏற்ற தருணமிதே

தருணமிதே அருளிட தயாபரா தாமதியாதே
தருணமிதே பொருள்தர தத்துவனே தடுத்தாள்
கருணாலயா காத்திடு கோவிந்தா கருணைசெய்
அருணலய மாகவே அற்புதம் நிகழவே

நிகழவே சீரிய நிலைத்த வாழ்வே
திகழவே இன்பம் திகட்டா ஆனந்தமே
புகழவே உலகு புலவன் இவனையே
இகழவே கூடாது இனியான் முக்தனே

முக்தனே முக்தீயை முச்சந்தியில் சேரவே
பக்தனே வேண்டினேன் பரிந்தருள் நல்குவாய்
புத்தனே வந்தானோ புண்ணியம் குமரியிலே
அத்தனே உந்தனுக்கு ஆளானோம் ஆதரியே

ஆதரியே என்னையே ஆபத்பாந் தவனே
ஆதரியேன் வினையே ஆற்றுப் படுத்தே
அதரிவேன் நிலைக்க ஆளாக்கு வாயே
ஆதரிப்பாய் அடியனை அருள்வாய் அன்பாகவே

*சுபம்*

**தானமும் தவமும் செய்க!**

**ஞான நூற்களை வாங்கி**
**ஞானதானம் செய்க!**
**மெய்ப் பொருளை உணர்ந்து**
**தவம் செய்க!**

 



"உன் இருதய குகையிலுள்ளது சிறு நெருப்பு
உணர்ந்து கொள்"

**N. கனகசபாபதி**
இராமலிங்க சுவாமி நிலையம்
ஆரல்வாய்மொழி

ஞானசற்குரு – ஸ்ரீலஸ்ரீ –

**சிவசெல்வராஜ்** அவர்கள்

பூவுடல் எடுத்த 50 ஆண்டுகள் 'பொன்விழா'

திருவடியை சரணடைந்த 25 ஆண்டுகள்

'வெள்ளிவிழா'



பூரணமாய்ப் பூத்தெழுந்த புண்ணியமெய் மாமலரின்
புகழ்விளங்க வந்த அய்யனே,
புருவநடுப் பொட்டினிடைப் புத்தமுதப் புனல்பெருகப்
புதையலான ஞான மெய்யனே
மரணத்தை வெல்லுகின்ற மாமணியின் சாட்சிதனை
மானுடர்க் களிக்க எண்ணியே . . .
மாதவத்தி லாழ்ந்துஞான மன்றிலேறி கனிபறித்த
'மாகுரு சிவ செல்வ ராஜரே'
காரணமாய் நான்குயுகக் காரியமும் ஆற்றிடவே
கருமணியுள் கனலு மாகியே
கருவறையும்; கல்லறையும்; காத்தருளும் கடவுளெனக்
கண்கலந்த வான வட்டமே
ஆரணமாய்ச் சிரசிடையில் அகரமாகி நின்றொளிரும்
ஆஃத்துணர்த்த வந்த செல்வமே
அடிபிடிக்க அமரமென்ற அறிவுணர்த்தி ஞானமேயும்
அற்புத மெய்ஞ்ஞான குருபரா . . .!